[1981 ஆகஸ்ட் 22

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : யானையைச் சுடுகிறவர்கள்மீது வன விலங்கு பாதுகாப்புச் சட்டப்படி, விதி 51-ன் கீழ் ஆறு மாதத்திற்குக் குறையாது ஆறு ஆண்டுகள் வரை கடுங்காவல் தண்டனையும் ரூ. 500 அபராதமும் விதிக்கப்பட வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் நீதிமன்றத்தில் இருக்கிற நீதிபதிகளின் உள்ளம் எப்படி இருக்கிறதோ அப்படி தண்டனை தரப்படுகிறது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பத்தாண்டுகளுக்கு முன்னால் இருந்ததை விட தற்போது தமிழகத்தில் உள்ள காடுகளில் இருக்கிற யானைகளின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகச் சொல்கிறார்களே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இந்த வினாவிற்கான விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. என். பழனிவேல் : தமிழகத்தில் உள்ள காடுகளில் யானைகள் மற்றும் தேசிய மிருகங்கள் எவ்வளவு உள்ளன என்ற கணக்கை அரசு அறிவிக்க முடியுமா? அதனால் அரசாங்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தனியாகக் கேள்வி போட்டால் தகவலைத் திரட்டித் தர இயலும்.

திருஉத்திரகோசமங்கையிலுள்ள அருள்மிகு மங்களநாத சுவாமி ஆலயம்.

* வினா எண். 7—திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருஉத்திரகோசமங்கையில் உள்ள கோவிலில் உள்ள நடராஜர் சிலை ' மரகதத்தால் ' ஆனது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அந்த சிலையின் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) இந்த கோவிலின் திருப்பணிக்கு அரசு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) & (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருஉத்திரகோசமங்கை அருள்மிகு மங்களநாதசுவாமி ஆலயத்திலுள்ள நடராஜர் சிலை விசேஷமான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஆகஸ்ட் 22]

கல்லில் செய்திருப்பதாகவும், அது மரகதம் என்றும் கூறப்படுகிறது. கருவறையில் உள்ளதால் அச்சிலையை மதிப்பிட முடியாத காரணத்தால், சரியான மதிப்பீட்டைத் தெரிவிக்க இயலாது.

(இ) மேற்கண்ட ஆலயத் திருப்பணிக்கு அரசு மானியமாக ரூ. 5,30,000 மும், ஆணையர் பொதுநல நிதியிலிருந்து ரூ. 25,000 மும் வழங்கப்பட்டுள்ளது.

திரு. வ. சத்தியமூர்த்தி : தலைவர் அவர்களே, திருஉத்திரகோசமங்கையிலுள்ள நடராஜர் சிலை பல கோடி ரூபாய் மதிப்புள்ள கல்லால் செய்யப்பட்டிருக்கிறது என்று அந்தப் பகுதி மக்களால் சொல்லப்படுகிறது. அது பாதுகாப்பில்லாத பழைய கட்டடத்தின் நடுவில் இருக்கிறது. தமிழகம் முழுவதும் பலயிடங்களில் பல ஆண்டுகளாகச் சிலைகள் திருட்டுப் போவதை எண்ணும்போது அதற்கு ஏதேனும் ஆபத்து வந்துவிடாத வகையில் தக்க பாதுகாப்பான ஒரு இடத்தில் அந்தச் சிலையை வைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நான் எனது பதிலில் கூறியிருக்கிறபடி அது வணக்கத்திற்குரிய கருவறைச் சிலையாக இருந்து வருகிறது. ஆகவே அதை அந்தயிடத்திலிருந்து அப்புறப்படுத்தி சரியான ஒரு பாதுகாப்பான இடத்தில் மற்ற வணக்கத்தில் இல்லாத சிலைகளைப்போல் அதை வைக்க இயலாது. இருந்தாலும் அந்தச் சிலையினுடைய பெருமதிப்பையொட்டியும் அதைப்பற்றிய மதிப்பீடுகள் அந்தப் பகுதியில் அதிகமாகச் சொல்லப்படுகிற காரணத்தாலும் அந்தச் சிலை மாத்திரமல்ல, பொதுவாக அந்த ஆலயத்திலே நல்ல பாதுகாப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : திருஉத்திரகோசமங்கை கோவில் கடந்த பல ஆண்டுகளாக 1959-ம் ஆண்டிலிருந்து புதுப்பிக்கப்படாமல், திருப்பணி நிறைவுபெறாமல் இருக்கிறது. அதற்கு பல லட்சக்கணக்கான ரூபாய் தேவைப்படும் என்று தெரிகிறது. அரசாங்கம் அளித்துள்ள ஐந்து இலட்சம் ரூபாயிலிருந்து கூடுதலான தொகையை அளித்து விரைவில் அந்தக் கோவிலின் திருப்பணி முடிவுபெற ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அது ஒரு மிகத் தொன்மையான கோவில். மாணிக்கவாசகரால் பாடப்பெற்ற கோவில். ஆகவே அதை நல்ல கல் வேலைகளால் பழங்கால முறைப்படி புதுப்பிக்க வேண்டுமென்று முன்னால் இருந்த இராமநாதபுரம் சேதுபதி மன்னர் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டு முதல் கட்டமாக சுமார் ரூ. 13,17,000-க்கு திட்டமிடப்பட்டு அது ரூ. 10,76,000-க்கு முடிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது கட்டமாக ரூ. 14,86,000-க்கு திட்டங்கள் தரப்பட்டிருக்கின்றன. அரசின் உதவியும் கேட்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம், அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று ஆணையருக்கு அறிவுறுத்தியிருக்கிறது.

[1981 ஆகஸ்ட் 22

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருஉத்திரகோசமங்கையிலுள்ள அந்த நடராஜர் விக்கிரமானது பிரசித்தி பெற்ற ஒரு விக்கிரகம்; அது விலை மதிக்க முடியாத பச்சைக் கல்லினால் செய்யப்பட்டது என்பது அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குத் தெரியும். அதற்கு மதிப்பு இவ்வளவு என்று சொல்லி, சிலை திருடுபவர்களுக்கு 'குளு' கொடுப்பதற்கு உதவியாக இருக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்வதோடு, அது வருஷம் முழுவதும் சந்தனத்தினால் பூசப்பட்டு, ஆண்டுக்கு ஒருமுறைதான் மக்களுக்குத் தரிசனம் கொடுக்கின்ற வகையில் உள்ளது என்று சொல்கிறார்கள். ஆகவே மிகப் பெரும் மதிப்புள்ள இந்தச் சிலையை மிகவும் அதிகமான பாதுகாப்போடு வைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலயத்திற்கு நான் நேரிலே சென்றிருந்தேன். அப்போது நம்முடைய கடலாடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் வந்திருந்தார்கள். அந்தச் சிலையைப் பற்றி விவரம் தெரிந்துகொள்ள முயற்சித் தோம். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்கள் சொன்னதுபோல், அந்த விக்கிரகம் ஆண்டு முழுவதும் சந்தனக் காப்பு செய்யப்பட்டு, சந்தனம் பூசப்பட்டிருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறைதான் அந்த சந்தனம் எடுக்கப்படுவதாகச் சொல்லுகிறார்கள். அன்றைக்கு நம் அதிகாரிகள் சென்று, அதை ஒரளவிற்காவது மதிப்பிட இயலுமா என்று அவர்களுக்கு நாங்கள் அறிவுறுத்திச் சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அதை மதிப்பீடு செய்து, அதற்குப் பிறகு தக்க பாதுகாப்புகளை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

முண்டந்துறை, நாங்குநேரி, அம்பாசமுத்திரம் ரேஞ்சுகளில் கால்நடைகள் மேய்ச்சலுக்கான அனுமதி.

* வினா எண், 8—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) திருநெல்வேலி மாவட்டம் முண்டந்துறை ரேஞ்ச், நாங்குநேரி ரேஞ்ச், அம்பாசமுத்திரம் ரேஞ்ச் பகுதிகள் கால் நடைகளின் மேய்ச்சலுக்கு விடப்படுகின்றனவா ?

(ஆ) 1977–1980 முடிய உள்ள ஆண்டுகளில் அவைகளின் மூலம் அரசுக்கு கிடைத்த வருவாய் எவ்வளவு ?